# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**:332/மா/2025

**நாள்: 21.01.2026**

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–8
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) உரிமையாளர்,
Kora Café Pvt. Ltd,
Chennai --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 18.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.08.2025 அன்று பெறப்பட்டு 332/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 18.08.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட 16.07.2025 நாளிட்ட மனுவின் நகலில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கதவு எண் 2வது அவென்யூ அண்ணாநகர், சென்னை–40 என்ற முகவரியில் கோராப்புட்ஸ் என்ற ரெஸ்டாரண்ட் ஓட்டல் இயங்கி வருகிறது. இந்த ரெஸ்டாரண்ட் முன்பகுதியானது சுமார் 500 அடி நீளம் இருக்கும். இந்த ரெஸ்டாரண்ட் உரிமையாளர்கள் சுமார் 25 அடி அகலம் 500 அடி நீளத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான பொது மக்கள் நடந்து செல்லும் நடைப்பாதையை ஆக்கிரமித்து ராட்சத இரும்பு தூண்களை வரிசையாக நடைப்பாதைகளில் புதைத்து அதற்கு மேல்புறத்தில் வரிசையாக தகர சீட்டுசெட்கள் அமைத்து அதில் மின்சார இணைப்பு கொடுத்து சீரியல் செட் மற்றும் பல்புகள் பொருத்தி மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். மேற்படி நடைப்பாதை முழுவதும் மரம் மற்றும் இரும்புகளால் செய்யப்பட்ட பங்க் கடைகளை வரிசையாக நடைப்பாதை முழுவதும் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில்

காணலாம். இதுபோல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் பாதசாரிகள் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் சாலையில் நடந்து சென்று விபத்துக்குள் சிக்குகிறார்கள்.மேற்படி தகர செட்டில் மின்சார விளக்குகள் பொருத்தி உள்ளதால் அங்கு மின்சாரம் தாக்கி பொதுமக்கள் உயிர்பலிகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. ஆகவே இம்மனுவைக் கண்ட 7 தினங்களில் வீடியோ புகைப்படங்களுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி பதில் அளிக்க உத்தரவிடக் கோரி பொதுநலன் கருதி தெரிவிக்கப்படுகிறது. மறுக்கும்பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி மூன்றாம் நடுவர் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்திலும் வழக்கு தொடர நேரிடும். அதற்கு ஆகும் செலவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வசூல் செய்ய நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதுசம்பந்தமாக மாநகராட்சி 1013 எண்ணிற்கு 30.06.2025 அன்று போன் செய்து புகார் அளித்து அதன் விபரத்தை புகைப்பட ஆதாரங்களுடன் சென்னை மாநகராட்சி 104 AEஅவர்களுக்கு அனுப்பப்பட்டது. இதுவரை நடவடிக்கை இல்லை.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் முதுநிலை உதவி ஆணையர் 30.10.2025 நாளிட்ட கடிதம் ம.அ.8. ந.க. எண் 10143/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, பகுதி–21, கோட்டம்–104ல் 2வது நிழற் சாலையில் Kora Food Court என்கின்ற நிறுவனத்தினர் நடைபாதையினை தற்காலிக இரும்பு தகடுகள் கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆக்கிரமிப்பு அகற்ற திரு.கோவிந்தராஜ் அளித்த புகார் மனு பெறப்பட்டது. அப்புகாரின் மனு மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மேற்காணும் இடத்தில் களஆய்வு செய்யப்பட்டதில் Kora Food Court நிறுவனம் நடைபாதையினை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என கண்டறியப்பட்டது.

மேலும் இப்புகார் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி TAMIL NADU LOCAL BODIES OMBUDSMAN ஆணையத்தின் 06.10.2025 நாளிட்ட கடிதம் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் மனுதாரரின் 16.07.2025 நாளிட்ட புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அந்நிறுவனத்திற்கு தாக்கீது வழங்க, 10.10.2025 நாளிட்ட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மேற்காணும் முகவரியில் உள்ள கட்டிடத்தின் மீது 28.10.2025 நாளிட்ட தாக்கீது NOTICE UNDER SECTION 128 (1) (b) OF TAMIL NADU URBAN LOCAL BODIES ACT, 1998, நாள் 28.10.2025 அன்று வழங்கப்பட்டு அதன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது..'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில் மனுதாரர் தனது 13.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"கடந்த 16.07.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு என்னால் வழங்கப்பட்ட மனுவில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையில் சுமார் 20 அடி அகலம், 500 அடி நீளத்தில் இராட்சத இரும்பு பழுப்புகளை வரிசையாக பூமிக்குள் புதைத்து அதற்கு மேல் தகர சீட்டுகளால் மேற்கூரைகள் அமைத்து அதில் மனித உயிர்களுக்கு தீங்குகள் ஏற்படுத்தும் வகையில் இரும்பு பைப்புகள் அடுக்கி இடையூறு செய்வதால் பாதசாரிகள் நடைப்பாதைகளை அங்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இது சம்பந்தமாக 18.08.2025 தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுவும் (முறையீட்டு மனு எண்–332/மா/2025) அளித்திருந்தேன். இந்த நிலையில் தற்பொழுது என்னால் வழங்கப்பட்ட மனுவின் பேரில் ஆக்கிரமிப்புகளை கடந்த 12.12.2025 அன்று உரிமையாளரே அகற்றியதை நான் அறிவேன். சரி செய்ததற்கு உயர்திரு ஆணையர் அவர்களுக்கும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கும் இந்த கடிதத்தின் வாயிலாக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனது புகார் மனுவை முடித்து கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6. சென்னை கோரா கேஃப் பிரைவேட் லிமிடெட் சார்பாக 15.12.2025 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்:–

பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்ட நோட்டீசிற்கு உடனடியாக பதிலளிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக தேவையான திருத்த நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உதவி பொறியாளர் அவர்களது நோட்டீசின் பேரில், சம்பந்தப்பட்ட இடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில், அடையாளம் தெரியாத சில நபர்களால் விட்டு செல்லப்பட்ட தேவையற்ற பொருட்கள் மற்றும் தடைகள், நடைபாதை மற்றும் மழை/வெயில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட தற்காலிக நிழற்கூடப் பகுதியில் இருந்தது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து,

- அந்த இடத்தில் இருந்த அனைத்து தேவையற்ற பொருட்களும் முழுமையாக அகற்றப்பட்டு,
- சம்பந்தப்பட்ட பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு,
- பொதுமக்களின் நடமாட்டத்திற்கு எந்தவித இடையூறும் இல்லாத வகையில் தற்போது பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், எமது நிறுவனம் எப்போதும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் முழுமையான ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருவதாகவும், சமூக பொறுப்பின் அடிப்படையில் சென்னை மாநகர காவல் துறையின் பொது பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஆதரவாக, சம்பந்தப்பட்ட பகுதியில் உயர்தர CCTV கண்காணிப்பு கேமராக்கள் எமது சொந்த செலவில் நிறுவப்பட்டுள்ளன என்பதையும் இவ்வாய்ப்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகாரத்தையும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தையும் நாங்கள் முழுமையாக மதிக்கின்றோம். எதிர்காலத்திலும், மாநகராட்சி அல்லது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் முறையீட்டு மன்ற நடுவர் வழங்கும் எந்தவொரு அறிவுறுத்தல், வழிமுறை அல்லது திருத்த உத்தரவையும் முழுமையாக கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதை உறுதியளிக்கின்றோம்.

உதவி பொறியாளர் அவர்களது நோட்டீசின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் தொடர்பான புகைப்பட ஆதாரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட விரிவான விளக்கங்கள், இணைக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, இவ்விவகாரம் தொடர்பாக விதிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ரத்து செய்து, மேலதிக நடவடிக்கைகளை கைவிட்டு, இவ்வழக்கை முடிவுறச் செய்யுமாறு பணிவுடன் கோருகிறோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை–40, அண்ணாநகர், 2வது அவென்யூ, கதவு எண்.2ல் கோரா புட்ஸ் என்ற ரெஸ்டாரண்ட்– ஹோட்டலின் உரிமையாளர் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து சுமார் 20அடி அகலம் 500 அடி நீளத்திற்கு இரும்புத்தூண்கள் அமைத்து சீரியல் செட், பல்புகள் பொருத்தி மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதால், பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியவில்லை என்று புகார் மனு அளித்ததன் தொடர்பாக, கோராபுட் கோர்ட் உணவகத்தின் உரிமையாளரே 12.12.2025 அன்று ஆக்கிரமிப்பினை அகற்றி விட்டார் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் இளநிலை பொறியாளர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்ட இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதில் Kora Food Court என்ற நிறுவனம் நடைபாதையினை ஆக்கிரமிப்பு செய்துள்ளது கண்டறியப்பட்டு அக்கட்டிட உரிமையாளர்களுக்கு Tamil Nadu Urban Local Bodies Act 1998. u/s 128 (1) (b)-கீழ் 28.10.2025 அன்று தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக Kora Food Court ன் உரிமையாளர் 07.12.2025 அன்று ஆக்கிரமிப்பினை முழுமையாக அகற்றிவிட்டார் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

9. இரண்டாம் எதிர்மனுதாரர் Kora Cafe Pvt. Ltd., உரிமையாளர் தரப்பில் உணவகத்தின் மேலாளர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்ட நோட்டீசிற்கு பதிலளிக்கப்பட்டு, புகாரில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக தேவையான திருத்த நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. மேலும், சம்பந்தப்பட்ட இடத்தில் அடையாளம் தெரியாத சில நபர்களால் விட்டு செல்லப்பட்ட தேவையற்ற பொருட்கள்,

அகற்றப்பட்டு அப்பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டும், தற்போது பொதுமக்களின் நடமாட்டத்திற்கு எந்தவித இடையூறம் இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், எங்கள் நிறுவனம், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு முழுமையான ஒத்துழைப்பு அளித்து வருகிறோம்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப்பொறியாளர் அளித்த நோட்டீசின்படி அங்குள்ள பொருட்கள் மற்றும் தடைகளை முற்றிலும் அகற்றிவிட்டதால், எங்கள் நடவடிக்கை மனுதாரரும் திருப்தி அளிப்பதாக தெரிவித்த காரணத்தினால், மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பான நடவடிக்கை ரத்து செய்யுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

10. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதம், வாக்குமூலம், எதிர்மனுதாரர்களாகிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன்முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை, இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் Kora Cafe Pvt. Ltd., என்ற உணவகத்தின் கடிதம் மற்றும் மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–40, அண்ணாநகர், 2வது அவென்யூ, கதவு எண்.2ல் கோரா புட்ஸ் என்ற ரெஸ்டாரண்ட்– ஹோட்டலின் உரிமையாளர் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து சுமார் 20அடி அகலம் 500அடி நீளத்திற்கு இரும்புத்தூண்கள் அமைத்து சீரியல் செட், பல்புகள் பொருத்தியதால், பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியவில்லை என்ற புகார் மனுவின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்களால் தாக்கீது அளிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக கோராபுட் கோர்ட் உணவகத்தின் உரிமையாளரால் மேற்கண்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதை மனுதாரரின் 13.12.2025 நாளிட்ட கடிதம் மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்ட இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதில், Kora Food Court என்ற நிறுவனம் நடைபாதையினை ஆக்கிரமிப்பு செய்துள்ளது கண்டறியப்பட்டு அக்கட்டிட உரிமையாளர்களுக்கு 28.10.2025 அன்று தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக Kora Food Court ன் உரிமையாளர் 07.12.2025 அன்று ஆக்கிரமிப்பினை முழுமையாக அகற்றப்பட்டது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி முதுநிலை உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியளாரால் வழங்கப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடைகளை முற்றிலும் அகற்றிவிட்டதாலும் தங்களது நடவடிக்கை மனுதாரருக்கு திருப்தி அளிப்பதாக மனுதாரர் தெரிவித்த காரணத்தினால், அன்னாரின் புகார் தொடர்பான நடவடிக்கையினை ரத்து செய்யுமாறு கோரியிருப்பது இரண்டாம் எதிர்மனுதாரர் Kora Cafe Pvt. Ltd., என்ற உணவகத்தின் மேலாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, சென்னை–40, அண்ணாநகர், 2வது அவென்யூ, கதவு எண்.2ல் இயங்கி வரும் Kora Food Courtன் முன்புறம் உள்ள நடைபாதையினை

ஆக்கிமிப்பு செய்யப்பட்டதை, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 உதவி ஆணையரால் மேற்கண்ட கட்டிட உரிமையாளர்களுக்கு 28.10.2025 அன்று தாக்கீது வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக Kora Food Court ன் உரிமையாளர் 07.12.2025 அன்று ஆக்கிரமிப்பினை முழுமையாக அகற்றப்பட்டு விட்டதாக தெரிவித்து, அதனை மனுதாரரும் உறுதி செய்த நிலையில், மனுதாரரின் மனுவின் மீது மேல்நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு.கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36பி, புல்லா அவின்யூ,
செனாய் நகர்,
சென்னை–600 030.

(4) உரிமையாளர்,
Kora Café Pvt. Ltd.,
கதவு எண் 340/16, 2வது அவென்யூ,
அண்ணா நகர்,
சென்னை–600 040.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

29/1/26
செயலாளர்

25.1.26